International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

அ. கருப்பன் செட்டியாரின் வருணனை மொழிநடையும் புனைவுமொழிக்கட்டமைப்பும்

மு. கோகிலா

முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவு எண்:24901401
ORCID: https://orcid.org/0009-0008-4036-1130

முனைவர் சி. சிதம்பரம், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை நெறியாளர், காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம் காந்திகிராமம் - 624302

ஆய்வுச்சுருக்கம்

இந்திய இலக்கிய அரங்கில் 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் உருப்பெற்ற பயண இலக்கியம் என்பது, கற்பனைப் புனைவுகளுக்கு மாற்றாக நேரடிப் பயண அனுபவங்களை உரைநடையில் பதிவு செய்யும் ஒரு தனித்துவமான வடிவமாகும். தமிழ் பயண இலக்கியத்தின் முன்னோடியான அ.கருப்பன் செட்டியாரின் (ஏ.கே.செட்டியார்) பயண எழுத்துகளில் அமைந்துள்ள வர்ணனை மொழிநடை மற்றும் புனைவு மொழி கட்டமைப்பை, பிரெஞ்சு இலக்கியக் கோட்பாட்டாளரான ஜெரார்ட் ஜெனட்டின் (Gérard Genette) விவரிப்பியல் கோட்பாட்டின் (Narratological Theory) பின்னணியில் இக்கட்டுரை ஆராய்கிறது. பயண இலக்கியத்தை ஒரு புனைவற்ற கதைசொல்லலாகக் (Non-fictional Narrative) கொள்ளும் இக்கட்டுரை, ஜெனட்டின் கோட்பாடுகளான கதைசொல்லியின் குரல் (Narrative Voice), கால ஒழுங்கு மாற்றி அமைத்தல் (Anachronism / Analepsis), மற்றும் விவரிப்பு வேகம் (Narrative Tempo) ஆகிய உத்திகள் அ.கருப்பன் செட்டியாரின் பயண நூல்களில் எவ்வாறு பயன்பட்டுள்ளன என்பதைச் சான்றுகளுடன் நிறுவுகிறது. குறிப்பாக, கொல்கத்தா அல்லது இலண்டன் நகரின் வீதிகளை விவரிக்கும் போது தனது சொந்த ஊரான காரைக்குடி அல்லது சென்னை வீதிகளை ஒப்பிடும் பின்னோக்கு உத்தி, அந்நியச் சூழலை வாசகனுக்குத் தன்மயமாக்கிக் காட்டப் பயன்படுகிறது. மேலும், வரலாற்று ஆசிரியர் மெக்காலே கண்ட காசி நகரத்திற்கும் தான் கண்ட காசிக்குமான வேறுபாடுகள், கொல்கத்தாவின் பாலங்கள் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவற்றைப் பதிவு செய்ததன் மூலம் அவரது தேர்ந்த ஆவணப்பதிவாளர் ஆளுமை வெளிப்படுகிறது. இதனுடன், பூரி ஜெகநாதர் ஆலய உணவகக் கடுகு எண்ணெய் அனுபவம், கோயில் பாண்டாக்களின் அணுகுமுறை மற்றும் அமெரிக்க உணவக அறிவிப்புப் பலகைகள் போன்ற எதார்த்தங்களை அங்கதச் சுவையோடு (Satire/Humor) அணுகியிருப்பது அவரது புனைவு மொழிக் கட்டமைப்பின் சிறப்பம்சமாக அமைகிறது. சுருங்கக்கூறின், சொந்த நாட்டின் புவியியல் மற்றும் பண்பாட்டுப் பெருமைகளை உணர்வதே பயணத்தின் முதல்படி என்ற தேசிய விழிப்புணர்வையும், எளிய மக்களின் புழங்குமொழி கலந்த அங்கத நடையையும், மேலைநாட்டு விவரிப்பியல் கோட்பாட்டிற்கு உட்படும் ஆவணக் கட்டமைப்பையும் ஒருங்கே கொண்டு தமிழ் பயண இலக்கிய வரலாற்றில் அ. கருப்பன் செட்டியார் அடைந்துள்ள தனித்துவமான இடத்தை இக்கட்டுரை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

முதன்மைச் சொற்கள்

அ.கருப்பன் செட்டியார், பயண இலக்கியம், பயணம், யாத்திரை, வழி, பதிவு, விவரிப்பியல்.

முன்னுரை

இந்திய இலக்கிய அரங்கில் பயண இலக்கியம் ஒரு முக்கியமான இலக்கிய வகையாக விளங்குகிறது. இது இந்திய இலக்கியத்தில் ஒப்பீட்டளவில் ஒரு புதிய வகையாகும். இது 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் தோன்றியது. இலக்கியங்களில் புனைகதை கற்பனையாக விவரிக்கப்படும் காட்சிகளுக்கு மாறாக பயண இலக்கியம் என்பது நேரடி பயண அனுபவங்களின் பதிவாக அமைகின்றது. பெரும்பாலான பயண இலக்கியப்படைப்புகள் உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. பெரும் பாலான மக்கள் பயண எழுத்தை வேற்று இடங்கள் அல்லது விசித்திரமான கதாபாத்திரங்களை பற்றிய கதைகளுடன் தொடர்புபடுத்தி கூறுகின்றனர். இந்த வடிவத்தில் வெளியிடப்படும் அனைத்தும் ஒரு பயணமாக கருதப்பட்டாலும் அது பயண இலக்கியம் ஆகாது. சங்க கால முதல் நவீன காலம் வரையிலான தமிழ் இலக்கியத்தில் பயணத்தை மையமாகக் கொண்ட இலக்கிய சொற்களுக்கு ஆற்றுப் படை, யாத்திரை, செலவு, பயணம், பிரயாணம் போன்றவை எடுத்துக்காட்டுகளா கும். அந்தவகையில் பயணஇலக்கியத்தின் முன்னோடி என்று அழைக்கப்படும் அ.கருப்பன் செட்டியாரின் பயண எழுத்துக் களில் காணப்படும் விளக்க மொழி மற்றும் புனைவு மொழி கட்டமைப்பு பிரெஞ்சு இலக்கியக் கோட்பாட்டாளரான ஜெரார்ட் ஜெனட்டின் விவரிப்பியல் கோட்பாட்டுடன் இக்கட்டுரை ஆராய்கிறது.

பயண இலக்கியம்-அகராதிகளின் விளக்கம்

பயணம் என்பதற்கு மதுரைத் தமிழ்ப் பேரகராதி புறப்பாடு, வெளியீடு, பிரயாணம் என்று விளக்கம் தருகிறது. தமிழ் லெக்சிகன் பயணம் என்பதற்குப் பிரயாணம் என்று பொருள் தருகிறது. கிரியாவின் தமிழ் அகராதி இருக்கும் ஊர், நகரம் முதலியவற்றிலிருந்து மற்றொன்றிற்குச் செல்லும் பயணம் என்று விளக்கம் தருகிறது. பயண இலக்கியம் என்பதற்கு ஒரு புதிய இடத்தை அல்லது சில இடங்களைப் பற்றிய செய்திகளை பயணம் செய்தவரின் அனுபவத்தில் குழைத்து எடுத்துப் படிப்போருக்கு சுவையும் எழுச்சியும் தரும் விதமாகச் சொல்லுவதே சிறந்த பயண இலக்கியம் (1990:பக்.2) என்று இரா.ஞான புஷ்பம் வரையறை தருகிறார்.

இரா.மோகனா தனது பயண இலக்கிய நூலில் பயணஇலக்கியம் என்பது ஒருவர் தாம் கண்டதையும் கேட்டதையும் அதனால் அடைந்த உள் உணர்வுகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள எழுதப்பட்டதே பயண இலக்கியம் ஆகும் (2006:பக்.8) என்று வரையறை செய்கிறார். பயணம் தொடர்பான பேச்சு, சொற்பொழிவு, கட்டுரை, கதை, கவிதை, படம், திரைப்படம் போன்றவற்றை பயணஇலக்கியம் என்கிறார் சோபனா பட்டாசார்ஜி. (2006:பக்.8, ட்ராவல் ரைட்டிங் இன் இந்தியா நூலில் இடம்பெற்றுள்ள பயணஇலக்கியத்திற்கான வரையறையின் கருத்து நிலை மொழிபெயர்ப்பு).

விவரிப்பியல் கோட்பாடு

பயண இலக்கியம் என்பது வெறும் தகவல்களின் தொகுப்பு அல்ல; அது ஒரு புனைவற்ற கதைசொல்லல் (Non-fictional Narrative) ஆகும். ஜெரார்ட் ஜெனட் (Gérard Genette) மற்றும் மார்க் பல்க் (Mieke Bal) ஆகியோரின் விவரிப்பியல் கோட்பாடுகளைக் அ.கருப்பன் செட்டியாரின் படைப்புகளுக்குப் பின்வருமாறு பொருத்திக் காண்பதற்கு இடமளிக்கிறது.

1. **பயணக் கதைசொல்லியின் குரல்**

அ.கருப்பன் செட்டியார் தன் நூல்களில் 'தன்முனைப்பற்ற' ஒரு சாட்சியாக விளங்கு கிறாரா அல்லது 'தன்முனைப் புள்ள' விமர்சகராக விளங்குகிறாரா? என்று ஆராய்வதாகும். சான்றாக, அவர் ஜப்பான் அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பதிவு செய்யும்போது, ஒரு செய்தியாளரைப் போல நடுநிலையான குரலை கையாள்கிறார். ஆனால், அதே பயணத்தில் தனக்கு ஏற்பட்ட இன்ப துன்பங்களை எழுதும்போது, ஒரு நண்பனைப் போல தன்வரலாற்றுக் குரலில் பேசுவதைக் காணமுடிகிறது.

2. **கால ஒழுங்கு மாற்றி அமைத்தல்**

பயணக் கட்டுரையில் நேர்க்கோட்டுப் பயணத்திற்கு நடுவே ஏற்படும் நினைவுக்

கூறல்களாகும். சான்றாக, அவர் இலண்டன் நகரின் ஒரு குறிப்பிட்ட வீதியை விவரிக்கும் போது, திடீரெனத் தமிழ்நாட்டின் காரைக்குடி அல்லது சென்னையின் வீதிகளை ஒப்பிடுவார். இந்த 'பின்னோக்குக் கால உத்தி' (Analepsis / Flashback) வாசகனுக்கு அந்நிய சூழலைத் தன்மயமாக்கிக் காட்ட செட்டியார் பயன்படுத்திய முக்கிய படைப் பாளுமை உத்தியாக அமைகின்றது.

3. **விவரிப்பு வேகம்**

சில முக்கிய வரலாற்று நிகழ்வுகள் அல்லது நபர்களைச் சந்திக்கும் போது (உதாரணமாக காந்தியடிகள் தொடர்பான தேடல்கள்), அவரது விவரிப்பு வேகம் குறைந்து, மிக நுணுக்கமான விவரணைகள் (Scenic description) இடம் பெறுகிறது. மாறாக, சாதாரணப்பயணங்களின் போது சுருக்கமான பதிவுகளாக (Summary) நகருகின்றது.

பிரெஞ்சு இலக்கியக் கோட்பாட்டாளரான ஜெரார்ட் ஜெனட் அவர்களின் விவரிப்பியல் கோட்பாடு பயண இலக்கிய ஆய்வில் பெரிதும் பயன்படுகின்றது. பயண இலக்கியங்களின் கட்டமைப்பு, கதையாடல் முறை மற்றும் பிற நூல்களுடனானத் தொடர்பு ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதாக இவரது கோட்பாடு அமைகின்றது. செட்டியாரின் பிரயாண நினைவுகள் நூலில், அவர் ஒரு புதியஇடத்தைப் பற்றி விவரிக்கும் போது, திடீரெனத் தனது சொந்த ஊரான காரைக்குடியையோ அல்லது தான் முன்பு பார்த்த ஒரு நிகழ்வையோ ஒப்பிட்டுக் கூறுவார். இந்த உத்தியை (Anachronism / Flashback) விவரிப்பியல் கோட்பாட்டின் வழி பகுப்பாய்வு செய்யமுடிகின்றது.

நினைவுகளின் பின்னோக்கிப் பார்வை

ஓர் இலக்கிய படைப்பிற்கு பின்னணியாக அமையக்கூடிய நிலம் என்பது புவியியல் அடிப்படையிலான நிலமாக மட்டுமல்லாமல் இன, மொழி, சமூக, பண்பாட்டு அடையாளங் களையும் உள்ளடக்கியதாகவே அமைகின்றது. படைப்பாளர் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் அல்லது சிந்திக்கும் சூழலே படைப்பின் பின்னணி நிலமாக மாறுகிறது. பின்னணி நிலம் என்பது அங்குள்ள இயற்கை வளங்கள், ஆறு, மலைப்பகுதிகள், தாவரங்கள், விலங்குகள், உணவு ஆகிய கூறுகளைக் கொண்டிருக்கும். அதோடு படைப்பாளர்கள் தங்களது இலக்கிய படைப்புகள் மூலம் தாம் வாழும் சம காலத்தின் சமூக, அரசியல், வாழ்வியல் சிக்கல்களையும் சேர்த்து பதிவு செய்கின் றார்கள். இதற்கு பயண இலக்கியங்கள் சிறந்த சான்றுகள் ஆகும். பயணங்கள், பாதைகள், அதன் வழியே கிடைக்கும் தரவுகளின் மூலம் பயண இலக்கியம் கட்டமைக்கப்படுகின்றது. இது பயணத்தைப் பின்னோக்கி மேற்கொள்வது போன்றதாகும். பயணஇலக்கியம் என்பது பயண எழுத்தாளர்களின் நினைவுகளையும் அது சார்ந்த நிகழ்வுகளையும் மீண்டும் உயிர்பிக்க உதவுகின்றன. சுருங்கச் சொல்வதெனில் நினைவுகளின் மீள்உருவாக்கம் என்றும் இதனைக் கூறலாம்.

பயணஇலக்கியம் படைக்கும் முயற்சியில் பயணம் மேற்கொள்ளும் இடங்களை கண்டுகளித்தல், ஆவணப்படுத்துதல் ஆகிய இரண்டும் வெவ்வேறு நிலைகளில் நிகழ்கின்றன. பயணம் மேற்கொள்ளும் போது கிடைக்கக்கூடிய தரவுகளை முழுமையாக சேகரித்து வைத்துக்கொள்வதும், நாட்குறிப்பு போல எழுதுவதும் பயண இலக்கியத்தின் முதல்படியாகும். ஆவணப்படுத்துகின்ற இரண்டாம் நிலையில் உரிய விளக்கங்களை சேர்ப்பதும், தேவையற்றத் தரவுகளை நீக்குவதும் முக்கிய இடம் பெறுகிறது. அத்துடன் பயண இலக்கியத்திற்கு உரிய மொழிநடையில் புனைவு மொழியோடு பயண இலக்கியத்தை படைப்பதும் அவசியமாகின் றது. முறையான திட்டமிடலுடனும் உரிய தரவுகளுடனும் எழுதப்படுகின்ற பயண இலக்கியங்கள் வாசகர்களிடையே வரவேற்பை பெறுகின்றன.

அ. கருப்பன் செட்டியாரின் பயணக்கட்டுரைகள்

பிரயாணம் செய்யுங்கள்

அ.கருப்பன் செட்டியார் பயணங்களின் தேவையினையும் அவை தரும் பயன்க ளையும் பண்புகளையும் இதில் விவரிக்கிறார். தனது நாட்டைப் பற்றி அறியாத ஒருவன் வெளிநாடு செல்வதில் பயன் ஒன்றும் இல்லை. சொந்த நாட்டை சுற்றி பார்க்காத தமிழர்களுக்கு தமிழ்நாட்டைப் பற்றி பேச தகுதியே இல்லை என்ற கருத்தினை உடையவர் கருப்பன் செட்டியார். இதனை கருப்பன் செட்டியார், **"உணவுச்சாலைகளில்**

பணிபுரியும் வேலைக்காரப் பையன்களுக்கு ஊர்கள் சுற்றிப் பார்ப்பதிலே அளவுகடந்த ஆர்வம் உண்டு. இன்று ஒரு பையன் சென்னையில் வேலை செய்வான். அடுத்த மாதம் அவனை பம்பாயில் பார்க்கலாம். சில மாதங்கள் கழித்து என்ன சார் சௌக்கியமா என்று அதே பையன் கல்கத்தாவில் நம்மை கேட்பான். பிரயாணம் செய்வதற்கு பொருள் வசதி இல்லாவிட்டால் பிரயாண சீட்டு இல்லாமல் கூட ரயிலில் பயணம் செய்வான். எலுமிச்சம் பழத்தின் மீது ஓர் எறும்பை விட்டால் அது சுற்றிக்கொண்டு மீண்டும் பழைய இடத்திற்கே வந்து விடுவதாக நாம் பூக்கோளத்தில் படிக்கிறோம். அதேபோல இந்த உணவுச்சாலை வேலைக்காரப் பையனும் சில வருஷங்கள் பல இடங்களில் சுற்றி மீண்டும் தன் ஊருக்கே வந்து விடுகிறான். நான் இந்த ஊரில் பத்து வருஷ காலமாக வேலை பார்க்கிறேன். வீடுண்டு, ஆபீஸ் உண்டு வேறொன்றும் எனக்கு தெரியாது அடுத்த வீட்டுக்காரர் யார் என்று கூட எனக்குத் தெரியாது என்று பெருமை யடித்துக் கொள்பவர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள். பர்மா, மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு செல்லும் தமிழர்கள் அந்நாடுகளின் பெருமைகளை பல மடங்காகப் போற்றி புகழ்வார்கள். தமிழர் களிலே பெரும்பாலோருக்கு தமிழ்நாட்டின் பெயரளவும் அதன் பெருமைகளும் தெரியாது தெரிந்து கொள்ளவும் விருப்பம் இராது". **(2010: ப.1)** பிற நாட்டை பற்றி அறிவதற்கு முன் நம் நாட்டை பற்றிய அறிவு நமக்கு இருக்க வேண்டும் என்றும் நம் நாட்டில் உள்ளவர்களே நம் நாட்டை பற்றிப் பெரிதும் அறியாது இருப்பதாகவும் அதனைத் தெரிந்து கொள்ளவும் விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதனையும் எடுத்துக் கூறியுள்ளார். அது மட்டுமல்லாது உணவுச் சாலையில் பணிபுரியும் வேலைக்கார பையன் ஓரிடத்தில் இருந்து தன் பணியை மேற்கொள்ளாமல் பல்வேறு இடங்களுக்கும் சென்று ஆர்வமுடன் பணிபுரிவதையும் இறுதி யில் அதே இடத்திற்கே வந்து சேர்வதையும் வர்ணித்து கூறியுள்ளார். இவ்வாறு பயணம் செய்வதினால் வேறு நாட்டைப்பற்றியோ நாட்டு மக்களைப் பற்றியோ அறிய முடிகின்றது என்கிறார்.

சென்னைக்கு வடக்கே

அ.கருப்பன் செட்டியார் தான் புறப்பட்ட இடம், சேருமிடம், உடன் பயணிப்போர், பயண தூரம், வழி, தங்குமிடம், அங்குள்ள வசதிகள் ஆகிய விவரங்களை முழுமையாக பதிவு செய்துள்ளார். மேற்கண்ட செய்திகளோடு தான் தங்கியிருக்கும் இடத்திற்கு பயணதூரம் எவ்வளவு? எவ்வாறு வந்து சேர்ந்தோம்? அந்த இடத்திற்கு அதற்கு முன்பு வந்து சென்றவர்கள் யார்? என்பதையெல்லாம் தேர்ந்த பயணஇலக்கிய படைப்பாளராகவேச் சிறப்பாக எழுதியுள்ளார். இதில் அ.கருப்பன் செட்டியாரின் பயண இலக்கிய வர்ணனை மொழிநடையும் புனைவு மொழிகட்டமைப்பும் இயல்பாகவே அமைந்து உள்ளன. இதனை அ.கருப்பன் செட்டியார் கல்கத்தா சென்றிருந்த போது முன்பு அவர் சென்றிருந்த அனுபவத்தையும், அப்போது அவர் பார்த்தவற்றையும் அதன்பிறகு அவர் கள் கல்கத்தா செல்லும்போது காண்பதையும் சிறப்பாகக் கூறியுள்ளார். **"சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டுக் கொண்டே கல்கத்தா போய் சேர்ந்தோம். எங்கள் ரயில் கல்கத்தா ரயில் நிலையத்தை அடைந்தது. ரயிலை விட்டு இறங்கியதும் கூலிகள் எங்களை வளைத்துக் கொண்டார்கள். அவர்கள் பேசியது எங்களுக்கு விளங்கவில்லை. ஏனென்றால், அவர்கள் ரூபாய்க்கணக்கில் கூலி கேட்டார்கள். முன் ஒருமுறை கல்கத்தா சென்றிருக்கிறேன். அப்பொழுதிருந்த கல்கத்தாவுக்கும் இப்பொழுது உள்ள கல்கத்தாவுக்கும் எவ்வளவு மாறுதல்கள்; வேறுபாடுகள். ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்ததும் கம்பீரமான பெரிய பாலம் தோற்றமளித்தது. அது உலகத்தில் உள்ள மிகப்பெரிய பாலங்களுள் ஒன்று. பார்வைக்கு மிகவும் அழகாய்த் தோன்றும் அந்தப் பாலத்தில் இரண்டு டிராம் பாதைகள், வண்டி -மோட்டார் போக்குவரத்துக்காக இரண்டு விசாலமான சாலைகள் நடப்பதற்கு இரண்டு ஓரங்களிலும் அகலமான நடைபாதைகள் ஆகியவை இருந்தன. அந்தப் புதிய பாலத்துக்கு பக்கத்தில் பழைய பாலம் இருந்தது. பழைய பாலத்துக்கும் புதிய பாலத்துக்கும் பெருத்த வித்தியாசமாக இருந்தது. அதைப் போலவே கல்கத்தாவின் பழைய ஜனத்தொகைக்கும் புதிய ஜனத் தொகைக்கும் பெருத்த வித்தியாசம் இருந்தது. அன்றைய கல்கத்தாவில் எத்தனையோ பிரச்சனைகள். அவற்றில்**

ஒன்று உணவுச் சாலை. முன் காலத்தில் ரயிலை விட்டு கீழே இறங்கினால் கூலிகளும் உணவுச்சாலை பிரதிநிதிகளும்தான் நம் பிராணனை வாங்குவார்கள். இரண்டாவது முறை கல்கத்தா சென்ற போது உணவுச் சாலை பிரதிநிதி என்ற இனமே மறைந்து விட்டது. உணவுச்சாலைக்கு பல நாள் முன்னதாக எழுதினால் சில சமயம் இடம் கிடைக்கலாம். சாதாரண நாளில் தினம் ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து ரூபாய் வாங்கிய உணவுச்சாலைகளில் அப்போது நாளொன்றுக்கு பத்து ரூபாய் முதல் 15 ரூபாய் வரை வாங்கினார்கள். ஐரோப்பிய உணவு சாலைகளில் 25 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை உண்டு. தனிஅறை கொடுக்க மாட்டார்கள். ஒருபடுக்கைதான் கொடுப்பார் கள். ஓரறையில் இரண்டு முதல், சமயத்திற்குத் தக்கபடி இன்னும் அதிகமாக வும் படுக்கைகளை போடுவார்கள். ஐரோப்பிய உணவுச் சாலைகளின் வாடகை மட்டும் கொடுத்தால் போதாது அதன் நிர்வாகிக்கோ அல்லது சிப்பந்திகளுக்கோ 25 அல்லது 50 ரூபாய் இனாம் கொடுக்க வேண்டும். இனாம் கொடுக்கும் தொகையை பொறுத்துதான் நமக்கு சௌகரியங்கள் கிடைக்கும். உணவுச்சாலையில் இடம் கிடைப்பது மட்டும் கஷ்டம் அல்ல; நல்ல சாப்பாடு கிடைப்பது கூட கஷ்டமான காரியம்" (2010:பக்.14-15) என்று அ.கருப்பன் செட்டியாரும் அவருடைய நண்பரும் கல்கத்தா சென்றிருந்த பொழுது அங்கிருந்த மாற்றங்களையும் அங்குள்ள உணவுச் சாலையில் ஏற்படக்கூடிய சிக்கல்களையும் ஆழமாக பதிவு செய்துள்ளார். கல்கத்தா முன்பிருந்ததுபோல் இல்லை என்றும் அங்கு நிகழக்கூடிய நெருக்கடிகளையும் வாசகனுக்கு துல்லியமாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக பின்னோக்கு நினைவூட்டல் உத்தியும் இவரது நேரடிப் பார்வையினையும் காணமுடிகிறது.

வடநாட்டு பிரயாணம்

அ.கருப்பன் செட்டியார் வடநாட்டுப் பிரயாணம் எனும் கட்டுரையில் காசிக்கு பயணம் மேற்கொண்டதைக் கூறியுள்ளார். அதோடு மெக்காலே காசிக்கு சென்றதும் இவர் காசிக்கு சென்றதும் இரு வேறுபட்ட அனுபவங்களாக இருந்ததையும் பதிவு செய்துள்ளார். "ஒரு சமயம் சரித்திர ஆசிரியர் மெக்காலே எழுதினார். ஆசியாவிலேயே செல்வம் ஜனத்தொகை பெருமை புனிதன் ஆகியவை நிறைந்த சிறந்த நகரம் காசி இந்நகரில் 5 லட்சத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் இருந்தார்கள். பார்க்கும் இடமெல்லாம் கோயில்கள் சித்திரவேலைப் பாடுகள் அமைந்த மாளிகைகள், புனிதமான குரங்குகளையும், சன்னியாசிகளையும், பசுக்களையும் தாண்டிக் கொண்டு ஒரு யாத்திரிகர் வீதியில் நடப்பது மிகவும் கஷ்டமான காரியம். எண்ணற்ற பக்தர்கள் கூடி நிற்பார்கள். காசியின் கலை கோயில்களுக்கும் இந்து கோயில்களுக்கும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நம்பிக்கை உள்ள நூற்றுக்கணக்கான இந்து பக்தர்கள் தினந்தோறும் வந்து கொண்டிருந்தனர். மாதந்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள், இங்கு இறப்பதற்காகவே வந்தனர். அவர்கள் காசியில் இறந்தால் முக்தி என நம்பினர். பக்தர்களைத் தவிர வியாபாரத்திற்காகவும் எண்ணற்ற மக்கள் காசிக்கு அடிக்கடி வந்தனர்.... காசியில் நெய்த துணிகள் உலகப் பிரசித்தி பெற்றவை. ஸெயின்ட் ஜேம்ஸ் அரண்மனையையும், வர்ஸெயில்ஸ் அரண்மனையையும் காசி பட்டுத்துணி அலங்கரித்தது; கடைத்தெருக்களிலே வங்காள மஸ்லின் துணிகளும், அயோத்திக் கத்தி களும் கோல்கொண்டா ஆபரணங்களும் காஷ்மீரச் சால்வைகளும் ஏராளமாக வியாபாரம் ஆயின. ஆனால் நான் அங்கு சென்றபோது காசியின் நிலை அவ்வாறு இல்லை. மெக்காலே பார்த்த காசி நகரத்துக்கும் நாங்கள் பார்த்த காசி நகரத்துக்கும் அதிகமான வித்தியாசங்கள் இருந்தன. முக்கியமாக இறப்பதற்காக அங்கு வருவோர் யாருமே இல்லை. முன்காலத்தில் காசி நகரம் கலைகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. இன்றும் அது கலைகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. காசியில் விசுவநாதர் ஆலயம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல காசி சர்வ கலாசாலை என்னும் கலைக்கோயிலும் முக்கியமானது..... காசி நகரம் முதலாவது ஒரு யாத்திரை ஸ்தலம். அடுத்தபடியாகத் தான் வியாபார ஸ்தலம். வருடந்தோறும் லட்சக்கணக்கான யாத்திரிகர்கள் விஸ்வ நாதரை தரிசிக்க வருவார்கள். காசிக்கு யாத்திரிகர்கள் வராத நாளே இல்லையென்று கூறலாம். இந்துக்கள் யார் வேண்டுமானாலும் விக்கிரத்தை தொட்டு பூஜை செய்யலாம்

(2010:பக்.22-23**).** இவ்வாறு தனக்கு முன்பாக அவ்விடத்திற்கு பயணம் செய்தவர்கள் பதிவு செய்துள்ளதையும் பிற்காலத்தில் இவர் அவ்விடத்திற்கு பயணம் செல்லும் போது ஏற்பட்ட மாறுதல்களையும் பயண இலக்கியத்தில் தேர்ந்த படைப்பாளராக எழுதியுள்ளார். அ.கருப்பன்செட்டியார் தனிப் பட்ட விருப்பு வெறுப்புகளின்றி பிறபடைப் பாளர்களின் பதிவுகளையும் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. மேலும் மேலைநாட்டறிஞரின் விவரிப்பியல் கோட்பாடு அ.கருப்பன் செட்டியாரின் பயண நூல்களில் பொதிந்து உள்ளதையும் காணமுடிகிறது.

அ. கருப்பன் செட்டியாரின் வருணனை மொழிநடையும் புனைவு மொழியும்

படைப்பாளர் ஒரு பொருளையோ, மனிதரையோ, இடத்தையோ வருணிக்கும் நிலையில் அவ்வகை உரைநடையை வருணனை உரைநடை எனலாம். புனை கதைகளிலும், பயண நூல்களிலும், கட்டுரை களிலும், விளக்க உரைநடையிலும் வருணனை இன்றியமையாத இடத்தினை பெறுகிறது. புனைவு மொழிக்கட்டமைப்பு என்பது நிகழ்வுவரிசை அதை வெளிப்படுத்தும் விவரிப்புமுறை (Discourse), கூற்றுக்கோணம் (Focalization), வட்டார வழக்கு மற்றும் படிமக்கூறுகள் ஆகிய மொழியியல் அம்சங்களின் ஒருங்கிணைப்பாக நூல்களில் வரையறுக்கப்படுகிறது. ஒவ்வொரு படைப் பாளருக்கும் தனித்த மொழிநடை உண்டு. அது பெரும்பாலும் அவருடைய புனைவு மொழியின் நீட்சியாகவே அமைகின்றது. தமிழ் இலக்கியத் திறனாய்வில், புனைவு மொழி என்பது கதை நிகழும் நிலம், காலம், கதாபாத்திரங்களின் சமூகப்பின்புலம் ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுபடும் சொற்பயன் பாட்டைக் குறிக்கும். அ.கருப்பன் செட்டியா ரின் பயண இலக்கிய மொழிநடையானது கூறவிழையும் செய்தியை கேட்பவரின் மனதில் எளிமையாகப் பதிய வைக்கும் இயல்பினை உடையது. மேலும் எளிய மக்களின் மொழி வழக்கோடு ஓசை நயமும் இணைந்த உரைநடையாக அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி அன்றாட மக்களின் புழங்கு மொழி வழக்கு, பிறமொழிக் கலப்புடன் கூடிய உரையாடல் முறை, தேவையான இடங்களில் மட்டும் நீண்ட வருணனை எனப் பன்முகப் பரிமாணம் கொண்டதாக இவருடைய மொழிநடையானது அமைகின் றது. அ.கருப்பன் செட்டியாரின் புனைவு மொழியில் குறிப்பிடத்தக்க மற்றொரு பாங்கு அவருடைய அங்கதநடை என்றால் அது மிகையாகாது. சான்றாக, திருடர்கள் ஜாக்கிரதை எனும் கட்டுரையில் **"இன்று ரொக்கம் நாளை கடன் என்று நமது நாட்டில் சில பலகார கடைகளில் பார்க்கிறோம். இந்த பலகைகளை தாங்கள் மிக்க புத்திசாலித் தனத்துடன் போட்டிருப்பதாக அந்த கடைக்காரர்கள் கருதுகிறார்கள் இதைவிட தயவுசெய்து கடன் கேட்காதீர்கள் என்ற பலகைகள் நல்ல பலனை கொடுக்கும். அமெரிக்காவில் சிறிய பட்டணம் ஒன்றில் ஒரு சிற்றுண்டி சாலைக்கு சென்றேன். அங்கு தயவு செய்து கடன் கேட்காதீர்கள் ஏனெனில் நாங்கள் மிகவும் ஏழைகள் என்ற பலகை காணப்பட்டது. இது மாதிரியான முறையை நம் நாட்டிலும் கையாளலாம் ஆனால் ஒன்று இந்த அறிவிப்பு பலகையை படித்த பின்னரும் கடன் கேட்பவர்களை என்ன செய்வது?" (2010:ப.8).** மேற்கண்டவற்றில் கருப்பன் செட்டியார் அமெரிக்காவில் சிற்றுண்டி சாலைக்கு சென்றபோது அங்கு பலகையில் காணப்பட்டதையும் அதேபோன்று நம் நாட்டில் இம்முறையினை கையாண்டால் அறிவிப்பு பலகையைப் படித்தும் கடன் கேட்பவர்களை என்ன செய்வது என்று அங்கதநடையில் கூறியுள்ளார். இதனை புதிய இடத்தைப்பற்றி விவரிக்கும்போது தனது நாட்டில் இவ்வாறு நடக்க நேர்ந்தால் எப்படியிருக்கும் என்று ஒப்பிட்டுக் கூறி உள்ளதைக் காணமுடிகிறது.

பூரி - ஜெகநாதம்

அ.கருப்பன் செட்டியார் ஒரிசா மாநிலத்தின் பூரிக்கு சென்றதைக் குறிப்பிடுகையில், பூரி நிலையத்தில் அவர் இறங்கியதும் உணவுச் சாலையில் அவர் தங்கி இருந்த அனுபவத் தையும் அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட உணவினையும் அங்கதநடையில் அழகாகப் பதிவு செய்துள்ளார். **"ஸ்நானம் செய்த பின்னர் சாப்பிடச் சென்றேன், உணவுச்சாலை முதலாளி என்னைப் பார்த்து நல்ல சாப்பாடு தருகிறேன். இங்கு நாங்கள் உபயோகிப்பது கடுகு எண்ணெய் என்றார். பசி வந்திட பத்தும் பறந்துபோகும் என்று சொல்வார்கள் ஆனால் உணவுச்சாலை முதலாளி கடுகு எண்ணெய் என்று சொன்னதும் எனது**

பசியை பறந்து போய்விட்டது. பிறகு கோயிலுக்கு செல்வதற்காக வெளியே வந்தேன். அப்பொழுது சாப்பாடு ஆயிற்றா கோயிலுக்கு செல்லலாமா என்று ஒருவர் என்னை மிக அன்புடன் கேட்டார். அவர்தான் நான் ஏற்கனவே சந்தித்த பாண்டாவின் பிரதிநிதி. எனது சாப்பாட்டை பற்றியும் நான் மோட்சத்திற்கு போவதை பற்றியும் அவர் கொண்டிருந்த அக்கறையை பார்த்தபோது எனக்கே ஆச்சரியமாக இருந்தது" (2010:ப.41). இவ்வாறாக இவர் தங்கி இருந்த உணவுச் சாலையில் கடுகு எண்ணெயில் சமைத்த உணவுகளே வழங்கப்படுகின்றன. அதனை கேட்டதும் இவருக்கு பசியே பறந்து போய் விட்டது என்றும் அவ்வுணவை இவர் சாப்பிட்ட பின் மோட்சத்திற்கு போவதாகவும் இவர் அங்கதநடையில் வருணித்து கூறியுள்ளார்.

முடிவுரை

அ.கருப்பன்செட்டியாரின் அசைக்க முடியாத சிந்தனையானத் தனது சொந்த நாட்டின் புவியியல் மற்றும் பண்பாட்டுப் பெருமை களை உணராதவர்கள் அயல்நாட்டின் சிறப்பு களைப் பேசுவதில் பயனில்லை என்ற கருத்து தமிழர்களிடையே சுயமரியாதையையும் தேடலையும் உருவாக்கும் நோக்கம் கொண்டதாக அமைகின்றது. மெக்காலே விவரித்த காசிக்கும், தான் கண்ட காசிக்கும் இடையே உள்ள கால மாற்றங்களையும், கொல்கத்தாவின் பழைய, புதிய பாலம் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தையும் ஒப்பிட்டுக் காட்டியதன் மூலம், காலத்தின் நகர்ச்சியைத் துல்லியமாகப் பதிவு செய்யும் தேர்ந்த ஆவணப் பதிவாளராகவே அவர் மிளிர்கிறார். இவருடைய வருணனை உரைநடை எளிய மக்களின் அன்றாடப் புழங்குமொழியை ஒட்டி அமைந்திருந்தாலும், ஓசை நயமும் பிறமொழிச் சொற்களின் இயல்பான கலப்பும் கொண்டு வாசகர்களைத் திகைப்படையச் செய்யாமல் பயணத்தோடு ஒன்றச் செய்வதாகவும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. தாம் பயணம் மேற் கொள்ளும் போது ஏற்படும் தங்குமிடச் சிக்கல்கள், உணவகங்களின் நடைமுறைகள், பூரிஜெகநாதர் ஆலய வழிபாட்டுத் தரகர்களின் (பாண்டாக்கள்) செயல்பாடுகள் மற்றும் அமெரிக்க உணவக அறிவிப்புப் பலகைகள் போன்ற எதார்த்தமான சூழல்களைப் பகடி மற்றும் அங்கதச் சுவையோடு (Satire) அணுகியிருப்பது இவருடைய புனைவு மொழிக் கட்டமைப்பின் உச்சமாகும்.

சுருங்கக்கூறின், அ.கருப்பன் செட்டியாரின் பயண இலக்கியங்கள் என்பது வெறும் நிலங்களின் வர்ணனை மட்டுமல்லாமல் மனிதர்கள், உணவுகள், பண்பாட்டு அதிர்வுகள் மற்றும் சமூகப் பொருளியல் சார்ந்த சிக்கல்களைத் தன்னுணர்ச்சியோடு மீளுருவாக்கம் செய்த நினைவுகளின் காலப் பேழையாகும். நேரடி அனுபவங்களின் சான்றாகவும், எளிய உரைநடை மற்றும் அங்கதப் புனைவின் உன்னத வடிவமாகவும் விளங்கும் இவருடைய எழுத்துக்கள், தமிழ் பயண இலக்கிய வரலாற்றில் என்றும் அழியாதத் தடம் பதித்தவையாகத் திகழ்கின்றன. இதன்வழி மேலைநாட்டாரின் விவரிப்பியல் கோட்பாட்டுடன் இவரது படைப்பு கள் ஒன்றியிருப்பதையும் நிறுவமுடிகிறது. இக்கட்டுரையின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பும் அ.கருப்பன் செட்டியாரின் தனித்துவமான ஆவணப்படுத்தும் முறையையும், அவரது தனித்துவமிக்க அங்கத (Humor/Satire) மொழிநடையையும் சிறப்பாக வெளிப்படுத்து வதாக அமைகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. இளவரசன்,சா. அயலகபயண அனுபவம், வெற்றி பதிப்பகம்,ஈரோடு, 2008.
2. ஞானபுஷ்பம்,இரா. தமிழில் பயண இலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1990.
3. மோகனா,இரா. பயண இலக்கியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2006.
4. பட்டச்சார்ஜி,ஷோபனா.ற்றாவல் ரைட்டிங் இன் இந்தியா, சாகித்ய அகாதமி, ரபிந்திர பவன், புதுதில்லி,2006.
5. செட்டியார், ஏ.கே.பிரயாணக் கட்டுரைகள், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2010.
6. பயணக் கோட்பாட்டாளர்கள், பயணக் கோட்பாடுகள், விவேக் தாரேஷ்வருடன் இணைந்து தொகுக்கப்பட்டது (கல் வெட்டிகள் 5, 1989)
7. கோகிலா,மு., அ.கருப்பன் செட்டியாரின் பயண இலக்கியக்கூறுகள்- ஆற்றுப்படை நூல்களை முன்வைத்து, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், ஜூலை 2026, E-ISSN: 2582-2810, DOI: https//doi.org/10.5281/zenodo.21644173.